# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.02.21 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# சேர்பெறுமதி வரி சட்டமூலம்
# (திருத்தம்)

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க,
சேர்பெறுமதி வரிச்சட்டத்தைத் திருத்துவதற்கானதாகும்

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்
அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 45.00 தபாற் செலவு : ரூபா 150.00

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்:-

(அ) ஓர் இலத்திரனியல் தளத்தின் மூலம் வதிவற்ற ஆளொருவரினால் சேவைகள் வழங்கப்படுவதன் மீது வரிப் பொறுப்பொன்றை விதிப்பதாகும்; அத்துடன்

(ஆ) எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித்திட்டத்தை இல்லாதாக்கி அதற்குப் பதிலாகச் சேர்பெறுமதி வரி மீளளிப்பு முறைமையை அறிமுகப்படுத்துவதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பின்வரும் வழங்கல்களின் பெறுமதியைப் பூச்சியமாகக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்:-

(அ) கட்டணமின்றி அல்லது ஒரு மானியமளிக்கப்பட்ட வீதத்தில் தொழில்தருநரொருவரினால் அவரது ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவுகள் அல்லது போக்குவரத்து;

(ஆ) இலங்கைக்கு வெளியேயுள்ள மீள்காப்புறுதியாளரொருவரிடமிருந்து ஏதேனும் உள்நாட்டுக் காப்புறுதிக் கம்பெனியினால் ஒரு வங்கியினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட ஏதேனும் மீள்காப்புறுதித் தரகு அல்லது ஏதேனும் நட்டஈடு; அத்துடன்

(இ) அரசாங்கத்தின் அல்லது ஒரு மாகாண சபையின் எவையேனும் பயன்படுத்தப்படாத அஞ்சல் மற்றும் அரசிறை முத்திரைகளின் முகப்பெறுமதிவரை அத்தகைய முத்திரைகள்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, வர்த்தக நோக்கங்களுக்காகப் பண்டங்களை ஏற்றுமதி செய்வதில் அல்லது இறக்குமதி செய்வதில் ஈடுபடுகின்ற ஆளொவ்வொருவரும், முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட வரிவிலக்களிப்புகளையும் குறித்துரைக்கப்பட்ட பதிவுத் தொடக்கநிலையையும் பொருட்படுத்தாது, இச்சட்டவாக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்படுவதனைத் தேவைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, வரிப்பட்டியலின் படிவத்தைக் குறித்துரைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இலத்திரனியல் வழிவகைகள் மூலம் விபரத்திரட்டுகளைக் கொடுத்துதவுவதனைக் கட்டாயமாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித்திட்டம் இல்லாதாக்கப்பட்டதன் காரணமாக வரி மீளளிப்புக்குத் தகவுடையவரான ஆளை இப்பிரிவின் நோக்கெல்லையின்கீழ் கொண்டு வருவதற்கும் அத்தகைய மீளளிப்பைச் செய்வதற்கான முறையைக் குறித்துரைப்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதாகும்; அத்துடன்

(ஆ) 5 ஆம் பிரிவின்கீழ் உணவுகளையும் போக்குவரத்தையும் வழங்குவதற்காகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள ஒரு தொழில்தருநரினால் பொறுக்கப்பட்ட

கொடுப்பனவுகளை உள்ளீட்டு வரவொன்றாக இப்பிரிவின் நோக்கெல்லையின்கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந் தன்மையினதாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 2 ஆம் பிரிவின் கீழான வரியைச் செலுத்துவதற்குத் தவறுகின்ற வதிவற்ற ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான வரித்தொகையை மதிப்பீடு செய்வதற்கு வரிமதிப்பீட்டாளருக்குத் தத்துவமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது, வெளிப்படுத்தப்படாத மற்றும் செலுத்தப்படாத வரிகளின் அறவீட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் வாசகம் 2 இனை செய்யப்பட்ட திருத்தத்துக்கான வினைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருமாறாகும்:-

(அ) “தகவுடைய ஏற்றுமதியாளர்” மற்றும் “பதப்படுத்தப்படாத கமத்தொழில் உற்பத்திப் பொருட்கள்” என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களைச் சேர்ப்பதாகும்; அத்துடன்

(ஆ) 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதற்கென “வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தைத் திருத்துவதாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம் முதன்மைச் சட்ட வாக்கத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II ஐ திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளுக்குப் புதிய விடயங்களைச் சேர்ப்பதாகும்.

ச.வ.-ஓ. 81/2024

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-**

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

1. (1) இச்சட்டம் 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) மூன்றாம் பிரிவின் (1) ஆம் பந்தியினால் செய்யப்பட்ட திருத்தம் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவின் (1) ஆம் பந்தியினால் செய்யப்பட்ட திருத்தம் 2024, சனவரி 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

2. (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "இறக்குமதி செய்யப்படுவதன் மீதும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இறக்குமதி செய்யப்படுவதன் மீதும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக, இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு இலத்திரனியல் தளமொன்றினூடாக வதிவற்ற ஆளொருவரினால் சேவைகள் வழங்கப் படுவதன்மீதும்,";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதன் மீது” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பண்டங்களை அல்லது சேவைகளை 2025, ஒற்றோபர் 1 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக வழங்குவதன்மீது” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (ஊ) என்னும் உட்பந்தியில், “இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் புடவை அல்லது துணையுறுப்புகள்.”. என்னும் சொற்களுக்குப் பதிலாக “2025, ஒற்றோபர் 1 ஆந்தேதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் புடவை அல்லது துணையுறுப்புகள்.”. என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில் -

(i) அதன் (vi) ஆம் உட்பந்தியில், “இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள்மீது” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர் இறக்குமதிசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள்மீது;” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) அதன் (vii) ஆம் உட்பந்தியில், “இறக்குமதிசெய்யப்பட்ட அத்தகைய பொறித்தொகுதி அல்லது எந்திரத் தொகுதிமீது;” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்குமுன்னர் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பொறித் தொகுதி அல்லது எந்திரத்தொகுதி மீது;” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "செலவுத் தொகையாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"செலவுத்தொகையாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தொழில்தருநர் ஒருவர், கட்டணமில்லாத உணவுகளை அல்லது மானியமளிக்கப்பட்ட உணவுகளை அல்லது ஊழியர்களின் வதிவிடத்துக்கும் வேலைத்தலத்துக்குமிடையே மோட்டார் கோச்சொன்றைப் பயன்படுத்தி கட்டணமின்றி அல்லது மானியமளிக்கப்பட்டவொரு வீதத்திலான போக்குவரத்தை அத்தகைய ஊழியர்களுக்கு வழங்கியுள்ளவிடத்து, அத்தகைய வழங்கல்களின் அல்லது சேவைகளின் பெறுமதி, 2024, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காகப் பூச்சியமாகக் கருதப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் உட்பிரிவு (15) ஐ உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(16) 2024, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காக,-

(i) இலங்கைக்கு வெளியேயுள்ள ஒரு மீள்காப்புறுதியாளரிடமிருந்து ஏதேனும் உள்நாட்டுக் காப்புறுதிக் கம்பெனியினால் ஒரு வங்கியினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட ஏதேனும் மீள்காப்புறுதித் தரகின் அல்லது ஏதேனும் நட்டஈட்டின்; அத்துடன்

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அல்லது ஒரு மாகாணசபையின் எவையேனும் பயன்படுத்தப்படாத அஞ்சல் மற்றும் அரசிறை முத்திரைகளின் முகப்பெறுமதிவரை அத்தகைய முத்திரைகளின், வழங்குகையினது

பெறுமதி, பூச்சியமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவின் (viii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

"(ix) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்குகின்ற தேதியன்று அல்லது அதன்பின்னர் வர்த்தக நோக்கங்களுக்காகப் பண்டங்களை இறக்குமதி செய்யின் அல்லது ஏற்றுமதி செய்யின், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவில், "இலங்கைக்குள் இறக்குமதிசெய்யும் பண்டங்களின் இறக்குமதியாளராகவுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் இறக்குமதியாளர் தவிர்ந்தவரும் இலங்கைக்குள் பண்டங்களை இறக்குமதி செய்பவருமான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2 அ) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக வரிப்பட்டியலின் படிவம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்." ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) (அ) ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட ஆளும், ஆணையாளர் தலைமையதிபதிக்கு –

(i) 2013, சனவரி 1 ஆந்தேதிக்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர் மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல், ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம், அவ்வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியின் போது அவரது வழங்கல்கள் பற்றிய விபரத்திரட்டொன்றையும் கொடுத் துதவுதல் வேண்டும்;

(ii) 2013, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் 2025, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும், ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர் மாதத்தின் கடைசி நாளுக்குப் பிந்தாமல், ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம், அவ்வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியின்போது அவரது வழங்கல்கள் பற்றிய விபரத்திரட்டொன்றையும் கொடுத் துதவுதல் வேண்டும்; அத்துடன்

(iii) 2025, யூலை 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்றபின்னர் மாதத்தின் கடைசி நாளுக்குப் பிந்தாமல், இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது அவரது வழங்கல்கள் பற்றிய விபரத்திரட்டொன்றையும் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன் அரசிறை நிருவாக, முகாமைத் தகவல் முறைமையினூடாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒப்புதலொன்று, விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்ற நேரத்தில் விபரத்திரட்டின் பெறுகைக்காக வழங்கப்படுதல் வேண்டும்:

ஆயின், தோதானவையென ஆணையாளர் தலைமையதிபதி கருதுகின்ற விசேட சூழ்நிலைகளில் எழுத்தில் ஒரு விபரத்திரட்டைக் கோப்பிடுவதற்குக் கோரிக்கை ஒன்றை விடுக்கின்ற ஆளொருவருக்கு ஆணையாளர் தலைமையதிபதி அனுமதியளிக்கலாம்.

(ஆ) அத்தகைய ஒவ்வொரு விபரத்திரட்டும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான அத் தகைய எல்லா விபரங்களையும் இயைபான அட்டவணைகளையும் கொண்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

(இ) இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, “இலத்திரனியல் வழிவகைகள்” என்பது, ஒரு கணனி முறைமையை அல்லது ஒரு செல்லிட இலத்திரனியல் உபாயத்தைப் பயன்படுத்துதல் என்று பொருளாகும்.”; அத்துடன்

(2) உட்பிரிவு (1ஆ) வில், “அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அறிவித்த லொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில் -

(அ) அதன் (இ) என்னும் பந்தியில், “2 ஆம் பிரிவின்கீழ் பிற்போடப்பட்ட வரி” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “2025, ஒற்றோபர் 1 ஆந்

தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பில் 2 ஆம் பிரிவின்கீழ் பிற்போடப்பட்ட வரி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (உ) என்னும் பந்தியில் -

(i) "2011 ஏப்பிரல் 1 ஆந்தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2011, ஏப்பிரல் 1 ஆந் தேதியிலிருந்து ஆனால், 2025, ஒற்றோபர் 1 ஆந் தேதிக்குமுன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ii) "2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) முதல் (vii) வரையிலான விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாளுக்குப் பண்டங்களை வழங்குபவராகவுள்ள வருமான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) முதல் (vii) வரையிலான விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளுக்குப் பண்டங்களை வழங்குபவராகவுள்ளவருமான"; அத்துடன்"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) பந்தி (உ) வை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஊ)(i)இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் விடயம் (i) இலும் விடயம் (ii) இலும் குறித்துரைக்கப்பட்ட 2024, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்காக; அல்லது

(ii) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் விடயம் (**xx**) இலும் விடயம் (**xxi**) இலும் குறித்துரைக்கப் பட்ட 2024, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக,

இச்சட்டத்தின் 83 ஆம் பிரிவின்கீழ் வரைவிலக்கணங்கூறப்பட்ட எவரேனும் தகவுடைய ஏற்றுமதி யாளரின் அல்லது 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் விடயம் (ii) இன்கீழ் அல்லது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் விடயம் (xxi) இன்கீழ் அமைச்சரினால் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்றவரும் அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதி அவ்வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதிக்காக அவரது மொத்த வழங்கல்களின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட இருந்ததுமான எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆளினதாக, 2 ஆம் பிரிவின்கீழ் பின்போடப்பட்ட வரியுட்பட உள்ளீட்டு வரியின் விஞ்சுதொகையொன்று இருப்பின்,";

(ஈ) அதன் (இ) என்னும் பந்தியில், "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது

அதன்பின்னர்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2011, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று தொடங்குகின்றதும் 2025, செத்தெம்பர் 30 ஆந்தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்றதுமான” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(உ) உட்பந்தி (இ) யை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(ஈ) விஞ்சுதொகையானது 2025, ஒற்றோபர் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலானதாக விருப்பின், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை யொன்றின்மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக ஆபத்து அடிப்படையிலான மீளளிப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பின்வருமாறு மீளளிக்கப்படுதல் வேண்டும்:-

(i) 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எல்லா விபரங்களையும் கொண்டுள்ள முறையான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவிய பின்னரும்; அத்துடன்

(ii) அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிவுற்றபின்னரான மாதத்தின் கடைசி நாளிலிருந்து அல்லது இயைபான வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்காக 21 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் அறிவித்தலொன்றை வழங்கிய பின்னர் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையானவொரு விபரத்திரட்டைக் கொடுத்துதவிய தேதியிலிருந்து, இவற்றுள் எது பிந்தியதாகவுள்ளதோ அதிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமலும்.”;

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (vi) ஆம் பந்தியில், "ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்குகை தொடர்பிலான கொடுப்பனவு," என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்குகை தொடர்பிலான கொடுப்பனவு," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான முதலாம் காப்பு வாசகத்தில்-

(i) பந்தி (ஆ) வில், "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxv) ஆம் விடயத்திலும் (xxvi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xx) ஆம் விடயத்திலும் (xxi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ii) "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxvi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் இரண்டாம் காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"ஆயின், மேலும் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நன்மை தொடர்பில், பதிவு செய்யப்பட்ட ஆள் என்ற முறையில், தொழில்தருநர், உணவு மற்றும் போக்குவரத்து என்பவற்றின் வழங்கலை

வெளியிலிருந்து வருவிக்கப் பெறுவதன்மீது அவரினாற் பொறுக் கப்பட்ட கொடுப்பனவுகளின்மீது அவரினாற் செலுத்தப்பட்ட வரி, அத்தகைய நன்மையின் பெறுமதி பூச்சியமாகவிருப்பதனைப் பொருட் படுத்தாது, ஒரு பதிவுசெய்யப் பட்ட ஆளின் உள்ளீட்டு வரவாக அனுமதிக்கப்படலாம்.".

(3) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில்-

(அ) அதன் இரண்டாம் காப்பு வாசகத்தின் விடயம் (ii) இல், "வரி பின்போடப்பட்டவையுமான வழங்கல்கள்;அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஒற்றோபர் 1 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக வரி பின்போடப்பட்டவையுமான வழங்கல்கள்; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் மூன்றாம் காப்புவாசகத்தில் -

(i) "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxvi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ii) மூன்றாம் காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxv) ஆம் விடயத்திலும் (xxvi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xx) ஆம் விடயத்திலும் (xxi) ஆம் விடயத்திலும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1ஆ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு இலத்திரனியல் தளமொன்றினூடாகச் சேவைகளை வழங்குகின்ற வதிவற்ற ஆளொருவரின் விடயத்தில், அத்தகைய வழங்கலின்மீது செலுத்தப்படற்பாலதானதும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலானதுமான வரியானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அவரினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான நடவடிக்கை முறைக்கமையவும் செலுத்தப்படுதல்வேண்டும்.

மேலே தரப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வரி எவ்வாளினால் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அவ்வாள் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களினால் ஏதேனும் வரி செலுத் தப்படற்பாலதாகவுள்ளவிடத்து, அத்தகைய ஒவ்வோராளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணைதவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக –

"இலத்திரனியல் தளம்" என்பது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வழங்குநர்கள், சேவை பெறுநர்களுக்குத் தமது சேவைகளை வழங்குவதற்கு அவர்களினால் பயன்படுத்தப்பட்ட ஒரு வலைத்தளம் அல்லது செல்லிடச் செயலியின் வடிவத்திலான ஏதேனும் நடவடிக்கைமுறை என்று பொருளாகும்;

"நிர்ணயிக்கப்பட்ட இடம்" என்பது, சேவைகளை வழங்குவதற்கு, அல்லது அதன் சொந்தத் தேவைகளுக்காகச் சேவைகளைப் பெற்றுப்

பயன்படுத்துவதற்கு மனித மற்றும் தொழினுட்ப வளங்களின் நியதிகளின்படி நிரந்தரமானதன்மை மற்றும் பொருத்தமான கட்டமைப்பின் போதிய அளவினால் குறித்துக்காட்டப்பட்ட ஓரிடம் என்று பொருளாகும்;

"வதிவற்ற ஆள்" என்பது, முதல்வராகவேனுஞ்சரி அல்லது முகவராகவேனுஞ்சரி அல்லது வேறேதேனும் தன்மையிலாயினுஞ்சரி, சேவைகளின் வழங்குகையை உட்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை இடைக்கிடையே பொறுப்பேற்கின்றவரும் ஆனால், இலங்கையில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் இடமெதனையும் கொண்டிராதவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்; அத்துடன் 10 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் நிர்ணயிக்கப்பட்ட தொழிலிடமொன்றின் ஆனால் 55 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அத்தகைய ஆளின் சார்பில் செயலாற்றுவதற்கு ஒரு முகவரைக் கொண்டுள்ளவராக இலங்கையில் வரிவிதிக்கப்படற்பாலதானவொரு செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற பதிவுசெய்யப்பட்ட அத்தகைய ஆளை உள்ளடக்காது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "வேண்டுகோள் விடுக்குமிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேண்டுகோள் விடுக்குமிடத்து; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு இலத்திரனியல் தளமொன்றினூடாக, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நியதிகளின்படி வதிவற்ற ஆளொருவரினால் சேவைகள் வழங்கப்படுவதன்மீது வரியிறுக்கப்படற் பாலவராகவுள்ள எவரேனுமாள்,".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 48ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"வெளிப்படுத்தப் படாத மற்றும் செலுத்தப்படாத வரிகளை அறவிடுதல்

48ஆ. இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவரேனுமாளினால் வழங்கப்பட்ட வரிப்பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்டவாறு வரிக்கு அமைந்தனவாகவுள்ள பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதற்காக அவரினால் சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரியை அவர் செலுத்தியிராதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதனை அல்லது பதிவு செய்யப்பட்டிராதிருப்பதனைப் பொருட்படுத்தாது, அத்தகைய ஆளிடமிருந்து அத்தகைய வரியைச் சேகரித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆ) 2014, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து அல்லது அதன்பின்னரான ஆனால், 2025, ஒற்றோபர் 1 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக ஆறு சதவீதம்; அத்துடன்

(இ) 2025, ஒற்றோபர் 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காகப் பத்துச் சதவீதம்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "கல்விச் சேவைகள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

“தகவுடைய ஏற்றுமதியாளர்” என்பது, முற்போந்த பஞ்சாங்க ஆண்டின்போது, இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு எந்தப் பதிவுசெய்யப்பட்ட ஆளின் பூச்சியம் வீதமிடப்பட்ட வழங்கல்களின் பெறுமதி, அதே காலப்பகுதியின்போது அந்தப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட வழங்கல்களின் மொத்தப் பெறுமதியைப் பார்க்கிலும் ஐம்பது சதவீதத்துக்கு அதிகமாகவுள்ளதோ அந்த ஆள் என்று பொருளாகும்;”; அத்துடன்

(2) “வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில்-

(அ) பந்தி (2) இல், 2011, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2011, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) பந்தி (2) இன் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(3) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக-

(அ) ஒரு மாதக் காலப்பகுதி;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்படாத அல்லது ஆணையாளர் தலைமையதி பதியினாலான எழுத்திலான முன்னங்கீகாரத்தின்மீது காலாண்டு விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிப்பதற்கு

விருப்புத்தெரிவிக்கின்ற பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் முறையே ஒவ்வோராண்டினதும் சனவரி முதலாந் நாளன்று, ஏப்பிறல் முதலாந் நாளன்று, யூலை முதலாந் நாளன்று மற்றும் ஒற்றோபர் முதலாந் நாளன்று தொடங்குகின்ற மூன்றுமாதக் காலப்பகுதியொன்று.”; அத்துடன்

(3) “தொலைத்தொடர்புச் சேவை” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

“பதப்படுத்தப்படாத கமத்தொழில் உற்பத்திப்பொருட்கள்” என்பது, காணியின்மீது அல்லது ஒரு பசும் மனையில் பயிரிடப்படுகின்ற எவையேனும் தாவரங்களிலிருந்து உற்பத்திசெய்யப்பட்ட ஏதேனும் உற்பத்திப்பொருள் என்று பொருளாகும் என்பதுடன் விற்பனைக்காக அத்தகைய உற்பத்திப்பொருளைத் துப்புரவாக்குதல், அளவிடுதல், தரம்பிரித்தல், தரப்படுத்துதல், வெட்டுதல் அல்லது குளிரூட்டுதல்மூலம் தயாரிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்களையும் உள்ளடக்கும்;”.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் III இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (அ) வில், விடயம் (x) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(xi) மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக இலங்கை மின்சாரசபைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட வேண்டிய இரசாயன பற்றியெரியக்கூடிய எண்ணெய்.

(2) பந்தி (ஆ) வில், (xxiv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xxv) உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட உடன்பாலிலிருந்து உற்பத்திசெய்யப்பட்ட திரவப்பாலும் யோகேர்ட்டும்;"

(3) பந்தி (இ) இல், (iii) ஆம் விடயத்தில், "கீழ் அடையாளங்காணப்பட்ட வானூர்தி எந்திரங்கள் அல்லது வானூர்தி உதிரிப்பாகங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கீழ் இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் அடையாளங் காணப்பட்ட வானூர்தி எந்திரங்கள் அல்லது வானூர்தி உதிரிப்பாகங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.